




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 247 | 01.03.2026 | SUNDAY | MAASI : 17 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 247 | 01.03.2026 | ஞாயிற்றுக்கிழமை | மாசி : 17 | விலை : ரூ.5/-


## இந்தியாவின் வளர்ச்சியில்

# "தனியார் பங்களிப்பு அவசியம்!"

## பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தல்

புதுடெல்லி: மார்ச்.1-

இந்தியாவின் வளர்ச்சியில் தனியார் பங்களிப்பு மிகவும் அவசியம். முதலீடு, புதுமை கண்டுபிடிப்பில் தனியார் துறை கவனம் செலுத்தி நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

கடந்த பிப்ரவரி 1ம் தேதி மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. பட்ஜெட்டுக்குப் பிந்தைய இணையவழிக் கருத்தரங்க தொடர் நேற்று தொடங்கியது. "வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான தொழில்நுட்ப சீர்திருத்தங்கள் மற்றும் நிதி" என்ற தலைப்பில் நடைபெற்ற முதலாவது கருத்தரங்கில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

வரும் 2047ம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதை கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் நாட்டின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்து பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.



குறிப்பாக நாட்டின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில் மத்திய பட்ஜெட்டில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு உள்ளன. இதன்படி நெடுஞ்சாலை, ரயில்வே, துறைமுகங்களின் கட்டமைப்புகள் விரிவுபடுத்தப்பட உள்ளன. மேலும் பட்ஜெட்டில் டிஜிட்டல் கட்டமைப்பு, எரிசக்தி திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இருக்கிறது.

தொழில் தொடங்க ஏதுவாக சூழல் உருவாக்கப்பட்டு உள்ளது. இந்தியாவின் வளர்ச்சியில் தனியார் பங்களிப்பு மிகவும் அவசியம். முதலீடு, புதுமை கண்டுபிடிப்பில் தனியார் துறை கவனம் செலுத்தி நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். உலக நாடுகளுடன் தனியார் நிறுவனங்கள் போட்டியிட வேண்டும்.

பட்ஜெட்டுக்கு பிந்தைய இணையவழி கருத்தரங்குகள் மிகவும் முக்கியமானவை. இந்த அமர்வுகள் வெறுமனே கருத்துப் பரிமாற்றம் என்ற அளவோடு நின்று விடாமல், பயனுள்ள சிந்தனையைத் தூண்டுவதாக இருக்க வேண்டும். பட்ஜெட்டை அமல்படுத்தும்போது ஏற்படும் நடைமுறை சவால்கள் குறித்து கருத்தரங்கில் கருத்துகளை பரிமாறிக் கொள்ள வேண்டும். இதன்மூலம் பொருளாதார கொள்கைகள், திட்டங்களை மேம்படுத்த முடியும். பல்வேறு பிரச்சினைகளுக்கு எளிதாக தீர்வு காண முடியும். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

## மதிமுக தனிச் சின்னத்தில் தான் போட்டியிடும்

### வைகோ திட்டவட்டம்

சென்னை: மார்ச்.1–

"மதிமுக தனிச்சின்னத்தில் தான் போட்டியிடும் என எங்கள் அவைத்தலைவர் சொல்லியுள்ளார். அதுதான் எங்கள் நிலைப்பாடு" என அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.



சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, " இன்று மூன்று கோரிக்கைகளை முதல்வர் ஸ்டாலினிடம் நேரடியாக எடுத்துரைப்பதற்காக அவரை சந்தித்தேன். காயிதே மில்லத் பெயரால் ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதை திமுக தேர்தல் அறிக்கையில் சேர்க்க வலியுறுத்தினேன். உடனே அக்கோரிக்கையை தேர்தல் அறிக்கையில் சேர்ப்பதாக சொன்னார்கள்.

இரண்டாவது, வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்களுக்கும், விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் கொடுப்பதை தடுப்பதற்கு மத்திய அரசு முயற்சி செய்கிறது. எனவே, சூரிய சக்தி மூலம் இலவச மின்சாரம் வழங்க முடிவெடுக்க கோரிக்கை வைத்தேன். அதனையும் திமுக தேர்தல் அறிக்கையில் சேர்ப்பதாக சொன்னார்கள்.

மூன்றாவதாக, வீரபாண்டிய கட்டபொம்மனின் முன்னோர்கள் திருப்பரங்குன்றம் கோயிலில் 500 ஆண்டுகளுக்கும் மேலாக கட்டபொம்மன் சத்திரம் அமைத்து 9வது மண்டகபடி செய்துவந்தனர். அவர்களின் நேரடி வாரிசு பீமராசா என்பவரிடம் முறைகேடாக கையெழுத்து பெற்று இன்னொரு குடும்பம், அந்த சத்திரம் எங்களுடையது என்று அறநிலையத்துறை மூலம் சொல்லியுள்ளனர். இதில் உரிய நடவடிக்கை எடுக்க முதல்வரிடம் கோரிக்கை வைத்தேன். அமைச்சர் சேகர்பாபுவிடம் இந்த பிரச்சினையை சொல்லி வேண்டிய ஏற்பாடுகளை செய்யச் சொல்லியுள்ளார்.

தொகுதிப் பங்கீடு பற்றி முதல்வரிடம் எதுவும் பேசவில்லை. தொகுதிப் பங்கீடு குறித்து மதிமுக குழு முதற்சுற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. மீண்டும் இரண்டாவது சுற்றுக்கு அழைப்பு வந்தால் பேச்சுவார்த்தை நடத்தப்படும். பேச்சுவார்த்தைக்கு பின்னரே இதுபற்றி பேச முடியும். மதிமுக தனிச்சின்னத்தில் தான் போட்டியிடும் என எங்கள் அவைத்தலைவர் சொல்லியுள்ளார். அதுதான் எங்களின் நிலைப்பாடு.

மோடி எத்தனை முறை காவடி தூக்கினாலும், பாஜக தமிழகத்தில் காலூன்ற முடியாது. பாஜகவால் தமிழகத்தை ஏமாற்ற முடியாது" என்றார்.

## பழநி தொகுதியில் திமுக சார்பில் வாக்காளர்களுக்கு 'ஹாட் பாக்ஸ்' விநியோகம்!

பழநி: மார்ச்.1–

வாக்காளர்களை கவர திமுக சார்பில் பழநி தொகுதி முழுவதும் 'ஹாட் பாக்ஸ்' விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பழநி தொகுதியில் 2.37 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர்.

கடந்த 2011ல் நடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் தோல் வியை தழுவிய அமைச்சர் ஐ.பெரியசாமியின் மகனான இ.பெ. செந்தில்குமார் (திமுக), அடுத்து வந்த 2016, 2021 தேர்தலில் வெற்றிபெற்று பழநி தொகுதி எம்எல்ஏ.வாக உள்ளார். 2026 தேர்தலில் முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சி.சீனிவாசனை எதிர்த்து, திண்டுக்கல் தொகுதியில் போட்டியிட கட்சி மேலிடம் அவ ருக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது.

ஆனால், அவரோ பழநி தொகுதியில் போட்டியிட்டு, 'ஹாட்ரிக்' வெற்றி பெறவே விரும்புகிறார். தேர்தல் நெருங்கும் நிலையில் தொகுதி முழுவதும் உள்ள வாக்காளர்களை கவர, திமுக திண்டுக்கல் மாவட்டம் சார்பில் துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாள் விழா சிறப்பு பரிசு என்ற பெயரில் 'ஹாட் பாக்ஸ்' திமுக பிரமுகர்கள் மூலமாக வீடு வீடாக வழங்கப்பட்டு வருகிறது.

முன்னாள் முதல்வர்கள் அண்ணா, கருணாநிதி, முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் ஸ்டாலின் படம் அச்சடிக்கப்பட்ட ஸ்டிக்கர் ஒட்டி, ஹாட் பாக்ஸ் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அதுவும் வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ள நபர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. இன்னும் ஹாட் பாக்ஸ் கிடைக்காதவர்கள் திமுகவினரை அணுகி ஹாட் பாக்ஸ் கேட்டு வருகின்றனர். இதுபோலவே, கட்சி நிர்வாகிகளுக்கும் வீட்டு உபயோக பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

தேர்தலில் திமுகவுக்கு வாக்களிக்க அறிவுறுத்தும் வகையில் ஹாட் பாக்ஸ் வாங்கியவர்களிடம் செல்போன் எண் பெறப்படுகிறது.

## "விஜய் மனைவி விவாகரத்து கோரியதை அரசியல் ஆக்கக் கூடாது" குஷ்பு கருத்து

சென்னை: மார்ச்.1-

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியது: "தேர்தலுக்கு பாஜக தயாராக உள்ளது. மதுரையில் பிரதமர் மோடி கலந்து கொள்ளும் பொதுக் கூட்டத்தில் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர். பிரதமர் மோடி தமிழகம் வருவது தேர்தலுக்காக மட்டுமல்ல. தமிழக மக்கள் மீது பிரதமருக்கு அன்பு, பாசம் உள்ளது.

ஓபிஎஸ் மீண்டும் அதிமுகவில் சேர இடம் கிடைக்கவில்லை. அதனால் அவருக்கு லாபம் கிடைக்கும் இடத்துக்கு சென்றுள்ளார். இன்னும் ஒரு வாரத்துக்கு பிறகு, பாஜக போட்டியிடும் தெ[illegible]குதிகள் விவரம் தெரியவரும்.

விஜய் மனைவி விவாகரத்து கோரியது, அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை. அதை அரசியல் ஆக்கக் கூடாது. கணவன் மனைவி இடையே உள்ள பிரச்சினைகளை நாம் பேசுவதற்கு எந்த உரிமையும் இல்லை.

காங்கிரஸ் கட்சி தனித்து நிற்பதற்கு தகுதியும் தைரியமும் கிடையாது. அவர்கள் திமுகவிடமும் விஜய்யிடமும் பேரம் பேசுகிறார்கள். அவர்களுக்கு யாரிடம் இருந்து லாபம் அதிகமாக வருகிறதோ அங்கு செல்வார்கள். இனி மத்தியில் காங்கிரஸ் ஒருபோதும் ஆட்சியைப் பிடிக்க முடியாது.

தற்போது தான், காங்கிரஸுக்கு ரோஷம் வந்து, தமிழகத்தில் ஆட்சியில் பங்கு வேண்டும் என கேட்கிறது. ஆட்சியில் பங்கு தரமாட்டோம் என்று திமுக கூறியும் காங்கிரஸுக்கு ரோஷம் வரவில்லை. சூடு சொரணை எதுவுமே, காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு கிடையாது.

காங்கிரஸ் கட்சிக்கு, திராணி இருந்தால், இந்த தேர்தலில் தனியாக நிற்கட்டும். பாஜகவை தயவுசெய்து காங்கிரஸோடு ஒப்பிட வேண்டாம். பாஜகவுக்கு உள்ள தைரியம், தமிழகத்தில் எந்த கட்சிக்கும் வராது" இவ்வாறு அவர் கூறினார்.




# பொலிவியாவில் கரன்சி நோட்டுகளை ஏற்றிச் சென்ற ராணுவ விமானம் விபத்து: 15 பேர் உயிரிழப்பு



லா பாஸ், மார்ச்,1-

பொலிவியா தலைநகர் லா பாஸுக்கு அருகில் அந்நாட்டு கரன்சி நோட்டுகளை ஏற்றிச் சென்ற ராணுவ சரக்கு விமானம் ஓடுதளத்தில் தரையிறங்கும் போது விபத்துக்குள்ளானதில் 15 பேர் உயிரிழந்தனர். விபத்தின் போது சிதறிய பணத்தை அள்ளிச்செல்ல முயன்ற மக்களை போலீஸார் விரட்டி அடித்தனர்.சி130 ஹெர்குலஸ் நிறுவனத்தின் போக்குவரத்து விமானம், எல் ஆல்டோ சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதையை விட்டு விலகி ஒரு குடியிருப்புப் பகுதியில் மோதி விபத்துக்குள்ளானதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

"விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை நாங்கள் மீட்டு வருகிறோம். இந்த விபத்தில் 15 பேர் உயிரிழந்தனர், பலர் காயமடைந்துள்ளனர்" என்று தேசிய தீயணைப்புத் துறையின் கர்னல் பாவெல் டோவர் செய்தியாளர்களிடம் கூறினார்,இருப்பினும், உயிரிழந்தவர்கள் விமானத்தில் இருந்தார்களா அல்லது லா பாஸ் விமான நிலையத்திற்கு அருகிலுள்ள நெடுஞ்சாலையில் நின்ற கார்களில் இருந்தார்களா என்பதை டோவர் தெளிவுபடுத்தவில்லை.

லா பாஸுக்கு அருகில் உள்ள எல் ஆல்டோ நகரில் வாகனங்கள் மீது மோதிய விமானம், பின்னர் ஒரு வயலில் விழுந்தது. விமானம் விபத்துக்குள்ளானபோது அது புறப்பட்டதா அல்லது தரையிறங்கியதா என்பது குறித்து முரண்பட்ட தகவல்கள் உள்ளன. இந்த விபத்தில் குறைந்தது 15 வாகனங்கள் சிக்கின என்றும், தீயணைப்பு வீரர்கள் விமானத்தை சூழ்ந்த தீயை அணைத்தனர் என்றும் டோவர் கூறினார்.

விபத்து காரணமாக எல் ஆல்டோ விமான நிலையத்துக்கு செல்லும் மற்றும் புறப்படும் அனைத்து விமானங்களும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

# அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது தீவிரத் தாக்குதல் நடப்பது என்ன?



தெஹ்ரான், மார்ச்.1-

ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் தீவிர தாக்குதலை தொடங்கியுள்ளன. ஈரான் சரணடைய வேண்டும் அல்லது மரணத்தை சந்திக்க வேண்டும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ஈரானின் தலைநகர் தெஹ்ரான் உள்ளிட்ட பல நகரங்களின் மீது வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. ஈரானும் பதில் தாக்குதல்களை தொடங்கியுள்ளது.

அமெரிக்காவின் அணுசக்தி ஒப்பந்தத்துக்கு ஒப்புக்கொள்ள ஈரானுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வரும் நிலையில், இந்த அணுசக்தி பேச்சுவார்த்தைகளில் ஈரானின் நிலைப்பாடு குறித்து தான் "மகிழ்ச்சியடையவில்லை" என்று ட்ரம்ப் நேற்று தெரிவித்தார். இதனையடுத்து இன்று ஈரான் மீது தாக்குதல்கள் தொடங்கப்பட்டன.'

'ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியை குறிவைத்து இந்த தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. ஆனால் அவர் தெஹ்ரானில் இல்லை. அவர் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்' என்று ஈரான் தரப்பு தெரிவித்துள்ளது.

முன்னதாக, கடந்த ஜூன் மாதம் ஈரான் இஸ்ரேல் இடையே நீடித்த 12 நாள் போர், ட்ரம்பின் தலையீட்டால் முடிவுக்கு வந்தது. இதனையடுத்து அணு ஆயுதத்தை கைவிடுவது குறித்து ஈரானுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தையை தொடங்கியது.

ட்ரம்ப் மிரட்டல்: ஈரான் தலைநகர் தெஹ்ரானில் தாக்குதல் தொடங்கிய சிறிது நேரத்தில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வெளியிட்ட சமூக வலைதள வீடியோவில், "ஈரானில் ஒருபோதும் அணு ஆயுதம் இருக்க முடியாது. அதனால்தான் ஆபரேஷன் மிட்நைட் ஹேமர் மூலம் ஃபோர்டோ, நடான்ஸ் மற்றும் இஸ்ஃபஹானில் ஈரானின் அணுசக்தி திட்டங்கள் தாக்கப்பட்டன.

ஈரான் தனது அணுசக்தி திட்டத்தை கைவிடுவதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் நிராகரித்துவிட்டது. ஐரோப்பாவில் உள்ள நட்பு நாடுகளையும், வெளிநாடுகளில் உள்ள அமெரிக்க துருப்புக்களையும் அச்சுறுத்தக்கூடியதும், விரைவில் அமெரிக்காவை அடையக்கூடியதுமான நீண்ட தூர ஏவுகணைகளை உருவாக்குவதை ஈரான் தொடர்ந்தது.

ஈரானிய ஆட்சியானது, அமெரிக்காவை குறிவைத்து முடிவில்லாத ரத்தக்களரி மற்றும் படுகொலை பிரச்சாரத்தை நடத்தி வருகிறது. இதனால் ஈரானில் அமெரிக்கா பெரிய போர் நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது.

ஈரானின் ஏவுகணைத் தொழிலை அமெரிக்கா தரைமட்டமாக்கி அதன் கடற்படையை அழிக்கப் போகிறது. ஈரான் மக்களே இப்போதுள்ள ஆட்சியை தூக்கி எறிந்து, உங்கள் அரசாங்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இது அநேகமாக தலைமுறைகளுக்கு உங்களுக்கான ஒரே வாய்ப்பாக இருக்கும்.

ஈரான் தனது ஆயுதங்களைக் கீழே போட்டால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும். இல்லையெனில் அவர்கள் நிச்சயமான மரணத்தை சந்திக்க நேரிடும்" என்றும் ட்ரம்ப் கூறினார்.

# "விஜய்யின் தனிப்பட்ட விஷயங்களை அரசியலில் பேச வேண்டிய அவசியம் இல்லை" கார்த்தி சிதம்பரம் எம்.பி



சிவகங்கை, மார்ச்.1-

"மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே கூட்டணி உள்ள கட்சிதான் ஆட்சியில் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. விஜய்யின் தனிப்பட்ட விஷயங்களை அரசியலில் பேச வேண்டிய அவசியமில்லை" என சிவகங்கை எம்.பி கார்த்தி சிதம்பரம் தெரிவித்தார்.

சிவகங்கை அருகே கீழப்பூங்குடியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக வந்த முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கூறுகையில், "மோடி மதுரைக்கு வரட்டும்; சாமி கும்பிட்டுவிட்டு செல்லட்டும். திமுக காங்கிரஸ் கூட்டணி பேச்சுவார்த்தை நடைபெறுகிறது" என்றார்.

அதன் பின் செய்தியாளர்களிடம் கார்த்தி சிதம்பரம் எம்.பி கூறுகையில், "பிரதமர் குடியிருப்புத் திட்டத்தில் அரசு ஒதுக்கும் நிதி போதவில்லை. இதனால் பலர் கூடுதலாக கடன் வாங்கி தான் கட்டுகின்றனர். கடன் கிடைக்காதோர் வீடுகளை கட்ட முடியாமல் நிறுத்தி வைத்துள்ளனர். இதனால் அத்திட்டத்தில் விலைவாசி உயர்வுக்கு ஏற்ப நிதியை மத்திய அரசு உயர்த்த வேண்டும்.

சாதுர்யமாக மிகப் பெரிய கூட்டணியை முதல்வர் அமைத்து கொண்டிருக்கிறார். அதற்காக அவருக்கு வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத்திலேயே அதிக மக்கள் தொகை மிகுந்த நாடு என்பதால், அதற்கேற்ப பொருளாதாரம் வளரதான் செய்யும். ஆனால், வளர்ச்சி என்பது சமமாக இல்லை. மேல்தட்டு மக்களுக்கு மட்டுமே வளர்ச்சி உள்ளது. கிராமத்தில் உள்ள அடித்தட்டு மக்களுக்கு பெரிய அளவில் வளர்ச்சி இல்லை.

காங்கிரஸ், திமுக இடையே கூட்டணி பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இந்தக் கூட்டணி கடந்த 2004ம் ஆண்டு கருணாநிதி, சோனியா காந்தியால் உருவாக்கப்பட்டது. தேர்தல்களை ஒன்றாக சந்தித்து பல வெற்றிகளை பெற்ற கூட்டணி. புதிய கட்சிகள் கூட்டணிக்குள் வந்துள்ளதால், அதனடிப்படையில் உடன்பாடு எட்டப்படும்.

முருகனின் ஆறுபடை வீட்டுக்கும் பிரதமர் செல்ல வேண்டும். பிரதமரின் அறிவிப்பு அனைத்துமே வெறும் அறிப்பாகவே உள்ளது. ஆனால், அமல்படுத்துவது இல்லை. ஏற்கெனவே மோடி தமிழகத்துக்கு பல முறை வந்துள்ளார். அப்போதெல்லாம் பாஜக தோல்வியைத்தான் தழுவியுள்ளது. அதேதான் இந்த தேர்தலிலும் நடக்கும்.

தவெக தலைவர் விஜய்யின் தனிப்பட்ட விஷயங்களை அரசியலில் பேச வேண்டிய அவசியமில்லை.

புதிய கட்சிகள் வந்துகொண்டே இருப்பதால் இண்டியா கூட்டணியின் பலம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே கூட்டணி உள்ள கட்சி தான் ஆட்சியில் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. தமிழகத்துக்கு மதச்சார்பற்ற அரசுதான் தேவை" என்று கார்த்தி சிதம்பரம் எம்.பி. கூறினார்.



# எஸ்400 ஏவுகணை செயல்படும் வீடியோ: இந்திய விமானப்படை வெளியிட்டது

புதுடெல்லி, மார்ச்.1-

அதிநவீன எஸ்400 வான் பாதுகாப்பு ஏவுகணை செயல்படும் வீடியோ காட்சிகளை இந்திய விமானப்படை நேற்று வெளியிட்டது.

ராஜஸ்தானில் நேற்று நடைபெற்ற 'வாயுசக்தி' போர் பயிற்சியின் முன்னோட்டமாக இந்த வீடியோ காட்சி விமானப் படை சார்பில் வெளியிடப் பட்டுள்ளது. எதிரி நாட்டு விமானங்களை ரேடார் மூலம் கண்டறிந்து, எஸ் 400 ஏவுகணையைச் செலுத்தி அழிக்கும் காட்சிகள் இந்த வீடியோவில் இடம்பெற்றுள்ளன. எதிரிகள் எட்டாத தூரத்தில் இருக்கலாம், ஆனால் எங்கள் பார்வையில் இருந்து தப்ப முடியாது என்ற சக்திவாய்ந்த வாசகத்துடன் இந்த வீடியோ பகிரப்பட்டுள்ளது.

மேலும் நீண்ட தூரத்தில் இருக்கும் இலக்கையும் துல்லியமாகத் தாக்கும் எஸ்400 ஏவுகணை என்ற தகவலுடன் வீடியோ வெளியாகியுள்ளது.இந்த வீடியோவில், வானில் இருக்கும் இலக்கை முதலில் எஸ்400 ரேடார் அமைப்பு கண்டறிகிறது. பின்னர் எஸ்400 ஏவுகணை செலுத்தப்பட்டதும், அது துல்லியமாக இலக்கைத் தாக்கி அழிக்கிறது. இது வரை பதிவு செய்யப்பட்ட மிக நீண்ட தூர இடைமறிப்பு அழிப்பு ஏவுகணை இது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025ம் ஆண்டு இந்திய விமானப் படை, ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலை நடத்தியபோது இந்த எஸ்400 வகை ஏவுகணைகள்தான் பயன்படுத்தப்பட்டன என்றும் விமானப்படை கூறியுள்ளது.

எஸ்400 ஏவுகணை அமைப்புகளை இந்திய ராணுவம் சுதர்சன சக்ரா என்று அழைத்து வருகிறது. இதை ரஷ்யாவின் அல் மாஸ்அன்டே நிறுவனம் தயாரித்துள்ளது. 2018ல் ஐந்து எஸ்400 வகை தாக்குதல் ஏவுகணை அமைப்புகளை ரஷ்யாவிடமிருந்து வாங்கியது. 2021ல் முதல் அவை இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

சுமார் 600 கிலோமீட்டர் தூரமுள்ள இலக்குகளையும் இந்த ஏவுகணைகள் துல்லியமாகத் தாக்கி அழிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது



# இந்த சாலை முஸ்லிம்களுக்கானது அல்ல' இந்து அமைப்பினர் சுவர் எழுத்துகளால் காஜியாபாத்தில் சர்ச்சை

புது டெல்லி, மார்ச்.1-

உத்தரப் பிரதேசம் காஜியாபாத்தில், 'இந்த சாலை முஸ்லிம்களுக்கானது அல்ல' என்ற சுவர் எழுத்துகளால் சர்ச்சை கிளம்பியுள்ளது. இவற்றை இந்துத்துவா அமைப்பான இந்து ராக்ஷா தளம் எழுதியது காட்சிப்பதிவாகி வைரலாகிறது.

உ.பி.யின் காஜியாபாத்திலுள்ள டெல்லி டேராடூன் நெடுஞ்சாலையில் உள்ள கட்டிடங்களில் சர்ச்சைக்குரிய வாசகங்கள் காணப்படுகின்றன. இவற்றில் இந்துத்துவா அமைப்பினரால், 'இந்த சாலை முஸ்லிம்களுக்கானது அல்ல' என்ற வாசகங்களை எழுதப்பட்டுள்ளது. காஜியாபாத்தின் இந்து ரக்ஷா தளம் ஆர்வலர்களின் காட்சிப்பதிவுகள் சமூகவலைதளங்களில் இதுபோன்ற சர்ச்சைக்குரிய வாசகங்கள்வெளியாகியுள்ளன.

இவற்றை இந்து ரக்ஷா தளத்தின் தலைவரான பூபேந்திர தோமர் என்ற பிங்கி சவுத்ரி சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளார். இந்த பகிர்வு குறித்து இந்து ரக்ஷா தளத்தின் தலைவர் பிங்கி சவுத்ரி, 'எங்கள் அமைப்பினரில் சிலர் நெடுஞ்சாலையில் உள்ள கட்டிடங்களின் சுவர்களில் முஸ்லிம்கள் சாலையைப் பயன்படுத்துவதைத் தடுக்க எழுதத் தொடங்கியுள்ளனர்.

நாங்கள் வரி செலுத்துகிறோம், ஆனால் ஜிஹாதிகள் அனைத்து அரசாங்கத் திட்டங்களின் பலனையும் பெறுகிறார்கள். அரசாங்கம் நமக்கு சகோதரத்துவத்தை கற்பிக்கிறது. ஆனால், அனைத்து பெரிய கோயில்களின் வருவாய் அரசாங்கங்களின் கருவூலங்களுக்கு செல்கிறது. இதுபோல், மசூதிகளிலிருந்து அரசு எதையும் பெறுவதில்லை என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மீது பிங்கி மேலும், முஸ்லிம்கள் பொது வசதிகளைப் பயன்படுத்துவதைத் தடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி உள்ளார். இது குறித்து அவர், 'அரசாங்கம் முஸ்லிம்களுக்கு அனைத்து அரசு சேவைகளையும், நலன்களையும் பறிக்க வேண்டும்.

இந்து வாக்காளர்கள் அரசாங்கத்தை அமைக்க உதவுகிறார்கள், ஆனால் பலன் இந்த ஜிஹாதிகளை போய் சேருகிறது.' எனத் தெரிவித்துள்ளார். வைரலாகி வரும் இக்காட்சிப் பதிவால் உ.பி.யில் சர்ச்சை கிளம்பியுள்ளது.

# மார்ச் 3ல் சந்திரகிரகணம்: பழநி முருகன் கோயிலில் காலை 10.30 வரை மட்டுமே பக்தர்களுக்கு அனுமதி



பழநி, மார்ச்.1-

மார்ச் 3ம் தேதி சந்திரகிரகணத்தை முன்னிட்டு, பழநி முருகன் கோயிலில் காலை 10.30 மணி வரை மட்டுமே பக்தர்கள் அனுமதிக்கப்படுவர் என தேவஸ்தான நிர்வாகம் அறிவித்துள்ளது.

வரும் மார்ச் 3ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 3.30 மணி முதல் மாலை 6.47 மணி வரை சந்திரகிரகணம் நிகழ உள்ளது. எனவே, அன்றைய தினம் பழநி தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயிலில் பகல் 12 மணிக்கு உச்சிக்கால பூஜை நடைபெறும். பூஜை முடிந்ததும் மலைக்கோயிலில் அனைத்து சந்நிதிகளும் நடை சாத்தப்படும்.

அதனால், படிப்பாதை, யானைப்பாதை, வின்ச் ரயில் மற்றும் ரோப்காரில் வரும் பக்தர்கள் அன்றைய தினம் மலைக்கோயிலுக்கு காலை 10.30 மணி வரை மட்டுமே அனுமதிக்கப்படுவர். சந்திரகிரகணம் முடிந்ததும் இரவு 7 மணிக்கு ஸம்ப்ரோச்சனை பூஜையை தொடர்ந்து, சாயரட்சை பூஜை நடைபெறும். பின்னர், தங்கரத புறப்பாடு மற்றும் அர்த்தஜாம பூஜை உடன் சந்நிதி அடைக்கப்படும்.

மார்ச்.4ம் தேதி புதன்கிழமை விஸ்வரூப தரிசனம் உட்பட அனைத்து பூஜைகளும் நடைபெறும். வழக்கம் போல் பக்தர்களும் சுவாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவர் என தேவஸ்தான நிர்வாகம் அறிவித்துள்ளது.

# "ஓ.பன்னீர்செல்வத்தை அதிமுகவில் சேர்க்காதது இபிஎஸ் எடுத்த சரியான முடிவு" கே.பி.ராமலிங்கம்



நாமக்கல், மார்ச்.1-

"ஓ.பன்னீர்செல்வத்தை அதிமுகவில் சேர்க்காதது சரியான முடிவு என்பதை எடப்பாடி பழனிசாமி நிரூபித்து விட்டார். சிவாஜியை காட்டிலும் ஓ பன்னீர்செல்வம் மிகப்பெரிய நடிகர்" என பாஜக மாநில துணைத்தலைவர் கே.பி.ராமலிங்கம் தெரிவித்தார்.

திருச்சியில் மார்ச் 11ம் தேதி நடைபெறும் பாஜக மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்ள உள்ளார். இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் மாவட்ட பாஜக அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற கட்சியின் மாநில துணைத்தலைவர் கே.பி.ராமலிங்கம் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: திமுகவில் உள்ள பாரம்பரிய நிர்வாகிகளை விட கட்சி மாறி வந்த நிர்வாகிகள் அதிகம்.

உதாரணத்துக்கு கண்ணப்பன், சேகர்பாபு, எ.வ.வேலு, முத்துசாமி, கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன், ஜெகத்ரட்சகன், டி. எம்.செல்வகணபதி, ரகுபதி உள்ளிட்டோர். மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற பயத்தில் தான் மாற்றுக் கட்சியினரை திமுக இணைத்துக் கொண்டிருக்கிறது. பெரும் விலை கொடுத்து கூட்டணியில் கட்சியினரை திமுக சேர்க்கிறது. இரட்டை எஞ்சின் ஆட்சி முறை தான் தமிழகத்திற்கு தேவை என மக்கள் முடிவு எடுத்து விட்டனர். தேசிய தலைமையுடன் இணைந்து நடத்தும் ஆட்சி தான் தமிழகத்துக்கு நல்லதாக அமையும்.

வட மாநிலங்களில் மத்திய அரசு இயற்றும் சட்டங்களை ஏற்றுக் கொள்ளும் அரசு இருப்பதால் அங்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. முறையற்ற ஆட்சி தமிழகத்தில் நடப்பதால் மாநிலத்தின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. இதற்கு சரியான தீர்வு, அதிமுக ஆட்சி தமிழகத்தில் அமைய வேண்டும். கூட்டணி வலுவாக இருந்தால் மட்டும் போதாது மக்கள் ஆதரவும் வேண்டும். அந்த வகையில் கடந்த 1996ம் ஆண்டு அதிமுகவிடம் அனைத்து கட்சிகளும் கூட்டணியில் இருந்தன. எனினும் மக்கள் ஆதரவு இல்லாததால் அதிமுக தோல்வி அடைந்தது. அதுபோல் தற்போது திமுகவிற்கு எதிரான மன நிலையில் மக்கள் உள்ளனர். அதனை அறுவடை செய்ய வேண்டும் என்ற காரணத்தினால் தவெக தலைவர் விஜய் தவெக, திமுகவிற்கும் தான் போட்டி எனக் கூறுகிறார்.

ஓ பன்னீர்செல்வத்தை அதிமுகவில் சேர்க்காதது சரியான முடிவு என்பதை எடப்பாடி பழனிசாமி நிரூபித்து விட்டார். திமுகவில் ஓ.பன்னீர்செல்வம் இணைந்ததால் அவர் அதிமுகவை இத்தனை ஆண்டு காலம் அழிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்துள்ளார் என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. சிவாஜியை காட்டிலும் மிகப்பெரிய நடிகர் ஓ.பன்னீர்செல்வம்.

திமுக மீது புகார் எழும் போது அதை மடைமாற்றும் விதமாக அரசு செய்தி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. அதிமுக தலைமையில் கூட்டணி பேச்சுவார்த்தை நடைபெறும். மார்ச் 15ம் தேதிக்குள் அனைத்தும் நிறைவு செய்யப்படும். பாஜக எந்தெந்த தொகுதிகளில் வெற்றி பெறுமோ அந்தந்த தொகுதிகளைக் கேட்போம். 234 சட்டப்பேரவை தொகுதிகளிலும் திமுகவுக்கு எதிரான வேட்பாளர்கள் தான். அவர்களை நாங்கள் களத்தில் இறக்குவோம். எங்களைப் பொறுத்தவரை திமுகவை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும் என்பதுதான் இலக்கு" இவ்வாறு அவர் தெரிவித்தார்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் இரண்டு கால்களை இழந்தவர்கள், முதுகு தண்டுவடம் பாதிப்படைந்தவர்கள் மற்றும் போலியோ நோய் பாதிப்படைந்தவர்களுக்கு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் 5 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான மோட்டார் பொருத்தப்பட்ட மின்சார வாகனம் 4 நபர்களுக்கும், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் சார்பில் 28 லட்சத்து 32 ஆயிரம் மதிப்பிலான 27 நபர்களுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் வழங்கினார்.




■ திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியம் வடகாடு ஊராட்சியில், அர. சக்கரபாணி அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.வடகாடு ஊராட்சிக்கு புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் பரப்பலாறு அணை சுற்றுலா மையம் அமைக்க அரசு அனுமதி பெற்றுத் தந்ததற்காக இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டது.திமுக மாவட்ட அவைத் தலைவர் F.மோகன் தலைமை வகித்தார். மாவட்ட மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினர். முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக பொறுப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## தெலங்கானாவில் 2 ஆண்டில் 591 மாவோயிஸ்ட்கள் சரண்: அமைதியாக சாதித்த பெண் ஐபிஎஸ் அதிகாரி

ஹைதராபாத், மார்ச்.1-

தெலங்கானா மற்றும் ஆந்திராவில் கடந்த 2 ஆண்டுகளில் 591 மாவோயிஸ்ட்கள் சரண் அடைந்ததில் பெண் ஐபிஎஸ் அதிகாரி சுமதி முக்கிய பங்காற்றியுள்ளார்.



மாவோயிஸ்ட்களை ஒழிக்க மத்திய அரசு கெடு விதித்து தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. சரணடையும் தீவிரவாதிகளுக்கு மறுவாழ்வு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி தெலங்கானாவில் சிறப்பு உளவுப் பிரிவு ஐ.ஜி சுமதி, மாவோயிஸ்ட் கமாண்டர்கள் மற்றும் உறுப்பினர்களிடம் தற்போதுள்ள நிலைமையை பக்குவமாக எடுத்துக் கூறி அவர்கள் சரணடைந்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பும்படி அறிவுரை கூறினார். இவரது தொலைநோக்கு மற்றும் பேச்சுவார்த்தை மாவோயிஸ்ட்களை சரணடைய சம்மதிக்க வைத்தது.

சுமதியின் தொடர் முயற்சியின் காரணமாக, கடந்த 2 ஆண்டுகளில் மாவோயிஸ்ட் கமாண்டர்கள் உட்பட 591 மாவோயிஸ்ட்கள் சரணடைந்துள்ளனர்.

மாவோயிஸ்ட் அமைப்பின் கமாண்டராக இருந்த திப்பிரி திருப்பதி என்ற தேவுஜிக்கு போலீஸாரிடம் சரணடையும் திட்டம் எதுவும் இல்லை. அவரிடம் பேச்சுவார்த்தை நடத்தி சரணடைய சம்மதிக்க வைத்தார் ஐ.ஜி.சுமதி. இதையடுத்து தேவுஜி மற்றும் அவரது கூட்டாளிகள் மால்லா ராஜி ரெட்டி மற்றும் இரண்டு மூத்த உறுப்பினர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சரணடைந்தனர்.

## பெங்களூருவில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா

பெங்களூரு, மார்ச்.1-

கர்நாடக மாநில திராவிடர் கழகத்தின் சார்பில் இன்று பெங்களூருவில் உள்ள தேவராஜ் அர்ஸ் பவனில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா நடத்தப்படுகிறது. திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடைபெறும் இவ்விழாவை கர்நாடக சமூக நலத்துறை அமைச்சர் எச்.சி.மஹாதேவப்பா பகல் 12 மணியளவில் தொடங்கி வைக்கிறார்.இதைத் தொடர்ந்து நடைபெறும் விழாவில் கர்நாடக அமைச்சர் பிரியாங்க் கார்கே, காங்கிரஸ் எம்எல்ஏ ரிஸ்வான் அர்ஷத், எம்எல்சி பி.கே. ஹரிபிரசாத், தலித் சங்கர்ஷ சமிதி தலைவர் மாவள்ளி சங்கர், பேரா. எஸ்.ஜி.சித்தராமையா, எழுத்தாளர்கள் கே.எஸ். பகவான், பஞ்சகெரே ஜெயபிரகாஷ், நடிகர் சேத்தன் அஹிம்சா, சமூக செயற்பாட்டாளர் டி.நரசிம்ம மூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்று உரையாற்றுகின்றனர்.

## மேற்கு வங்க எஸ்ஐஆர் பணி: புதிய மனு தள்ளுபடி

புதுடெல்லி, மார்ச்.1-

எஸ்ஐஆர் பணியில் மாவட்ட நீதிபதிகளுக்கு தேர்தல் ஆணையம் வழங்கும் பயிற்சிக்கு எதிரான மனுவை விசாரிக்க உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.



வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த பணியில் முரண்பாடுகள் சார்ந்த கோரிக்கை, ஆட்சேபனை மனுக்களை பரிசீலிக்க மாவட்ட நீதிபதிகள், மாவட்ட முன்னாள் நீதிபதிகளை பணியில் அமர்த்துமாறு கொல்கத்தா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியை உச்ச நீதிமன்றம் கேட்டுக் கொண்டது. இதனிடையே, அண்டை மாநிலங்களான ஒடிசா, பிஹார் மாநிலங்களை சேர்ந்த மாவட்ட நீதிபதிகளை வாக்காளர் பட்டியலில் முரண்பாடுகள் சார்ந்த கோரிக்கை, ஆட்சேபனை மனுக்களை பரிசீலிக்கும் பணியில் ஈடுபடுத்த அனுமதி வழங்கி அண்மையில் உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் அமர்வு முன்பாக மூத்த வழக்கறிஞர் கபில்சிபல் ஆஜராகி ஒரு மனுவை தாக்கல் செய்தார். அதில், எஸ்ஐஆர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மாவட்ட நீதிபதிகளுக்கு தேர்தல் ஆணையம் பயிற்சி வழங்குகிறது. எந்த ஆவணங்களையெல்லாம் ஏற்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. மாவட்ட நீதிபதிகளை சுதந்திரமாக செயல்பட உத்தரவிட வேண்டும் என முறையிட்டார்.

இதை நிராகரித்த தலைமை நீதிபதி, ''எஸ்ஐஆர் குறித்து யார் பயிற்சி வழங்க முடியும்? தற்போது எங்கள் நீதிசார் அலுவலர்களை சந்தேகிக்காதீர்கள். நீதிபதிகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது தெரியும். இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் தெளிவான உத்தரவை பிறப்பித்துள்ளது'' என்று குறிப்பிட்டனர்.

## "குட்டி ஸ்டாலின்கள் கொண்டாட்டம்!" காலை உணவுத் திட்டத்திற்கு நன்றி தெரிவித்த இல்லம் தேடிக் கல்வி மைய மாணவர்கள்

கந்தர்வகோட்டை, மார்ச்.1-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம், காட்டுநாவல் இல்லம் தேடிக் கல்வி மையத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வினோதமான மற்றும் நெகிழ்ச்சியான கொண்டாட்டங்கள் நடைபெற்றன. காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட புரட்சிகரமான திட்டங்களைச் செயல்படுத்திய முதலமைச்சருக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, மாணவர்கள் அனைவரும் முதலமைச்சரின் உருவம் பதித்த முகக்கவசங்களை அணிந்து உற்சாகமாகக் கொண்டாடினர்.



இந்நிகழ்விற்குத் தன்னார்வலர் சுமதி வரவேற்புரை ஆற்றினார். சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்ட முன்னாள் இல்லம் தேடி கல்வி மைய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா பேசுகையில், "கொரோனா காலத்தில் ஏற்பட்ட கற்றல் இழப்புகளைச் சரிசெய்ய இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழகத்தில் தான் 'இல்லம் தேடிக் கல்வி'த் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை ஐநா மன்றமே பாராட்டியுள்ளது. குறிப்பாக, 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் பசியைப் போக்கி ஊட்டச்சத்தை உறுதி செய்யும் 'காலை உணவுத் திட்டம்' ஒரு மகத்தான சாதனை. இன்னும் பத்து ஆண்டுகளில் இத்திட்டத்தால் தமிழகத்தில் மிகப்பெரிய ஆற்றல்மிக்க மாணவர்கள் உருவாவார்கள்" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

நிறைவாக, மாணவர்கள் அனைவரும் முதலமைச்சரின் முகக்கவசங்களை அணிந்து "வாழ்க முதலமைச்சர்" என முழக்கமிட்டு இனிப்புகளைப் பகிர்ந்து கொண்டனர். அரசின் திட்டங்கள் தங்களை எப்படி மேம்படுத்தியுள்ளது என்பதை மாணவர்கள் நெகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தனர்.

## என்சிஇஆர்டி புத்தகத்தை சட்டத் துறை உறுப்பினர் சரிபார்க்க வேண்டியது கட்டாயமில்லை: அதிகாரிகள் விளக்கம்

புதுடெல்லி, மார்ச்.1-

தடை செய்யப்பட்ட என்சிஇஆர்டி 8ம் வகுப்பு புத்தகத்தை தயாரித்த குழுவில் வழக்கறிஞர் இடம் பெற்றிருந்தார், அதை சட்டத்துறை உறுப்பினர்கள் சரிபார்க்க வேண்டும் என்ற கட்டாய விதிமுறை இல்லை என அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.



தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் (என்சிஇஆர்டி) சமூக அறிவியல் பாடப் புத்தகத்தில் 'நமது சமூகத்தில் நீதித்துறையின் பங்கு' என்ற தலைப்பிலான பாடம் இடம் பெற்றிருந்தது. இதில் நீதித்துறை பற்றி சர்ச்சைக்குரிய கருத்தும் விவரிக்கப்பட்டிருந்தது.

இது குறித்து உச்சநீதிமன்றம் தானாக முன் வந்து வழக்குப் பதிவு செய்து விசாரித்தது. நீதித்துறையை அவமதிக்கத் திட்டமிட்ட சதி செய்யப்பட்டது போல் தெரிகிறது என கருத்து தெரிவித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான அமர்வு, இதற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறியது.

அப்போது மத்திய அரசு சார்பில் ஆஜரான சொலிசிடர் ஜெனரல் துஷார் மேத்தா நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்டார். இதையடுத்து இந்த புத்தகத்துக்கு தடை விதிப்பதாக உத்தரவிட்ட உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு, இந்த விவகாரம் குறித்து மத்திய கல்வித்துறை செயலாளர், என்சிஇஆர்டி இயக்குநர் விளக்கம் அளிக்க உத்தரவிட்டது.

இந்நிலையில் 8ம் வகுப்பு பாடப் புத்தகத்தில் சேர்க்கப்பட்ட 'நமது சமூகத்தில் நீதித்துறையின் பங்கு' என்ற அத்தியாயம் புத்தகம் வெளியாவதற்கு முன்பாக சட்டத்துறை உறுப்பினர்களால் ஆய்வு செய்யப்படவில்லை என்ற விமர்சனம் எழுந்துள்ளது.

இது குறித்து விளக்கம் அளித்த கல்வித்துறை அதிகாரிகள், ''என்சிஇஆர்டி புத்தகம் தயாரித்த குழுவில் வழக்கறிஞரும் இடம் பெற்றிருந்தார். ஆனால் என்சிஇஆர்டி புத்தகத்தை சட்டத்துறை உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் சரிபார்க்க வேண்டும் என்ற கட்டாய விதிமுறை எதுவும் இல்லை'' என்றனர்.



## திருப்பரங்குன்றம் முருகராவது மோடிக்கு நல்லபுத்தி கொடுக்கட்டும்: அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி

பெரம்பூர், மார்ச்.1-

திருவிக.நகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 6இடங்களில் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு இன்று காலை துவக்கி வைத்தார். சென்னை திருவிக. நகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 71 வது வார்டு பெரம்பூர் நெல்வயல் சாலையில் நூலகம் கட்டும் பணி, 72வது வார்டு பகுதியில் பழைய வெங்கடேசபுரம், வஉசி. நகரில் பல்நோக்கு மையக் கட்டிடம் கட்டும் பணி, 73வது வார்டு கிரே நகர், பழைய வாழை மாநகரில் உடற்பயிற்சி கூடம்,பூங்கா கட்டும் பணி, 75வது வார்டு சிவசண்முகபுரம் பகுதியில் பல்நோக்கு மையம் கட்டிடம் கட்டும் பணி, 75வது வார்டு தலைமைச்செயலக காலனி பகுதியில் உள்ள உடற்பயிற்சி கூடத்திற்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி, 76 வது வார்டு ஸ்டாரன்ஸ் சாலை மற்றும் கே.எம்.கார்டன் பகுதியில் பல்நோக்கு மைய கட்டிடம் கட்டும் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகளை இன்று காலை அமைச்சர் பி.கே. சேகர்பாபு துவக்கி வைத்தார்.Urban Transit

இந்த நிகழ்ச்சியில், சென்னை மேயர் பிரியா, தாயகம் கவி எம்எல்ஏ, பகுதி செயலாளர்கள் தமிழ்வேந்தன், சாமிக்கண்ணு, மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ்குமார் உள்பட பலர் கலந்துகொண்டனர். இந்த ஆய்வுக்கு பின்னர் அமைச்சர் சேகர்பாபு கூறியதாவது; திருப்பரங்குன்றத்துக்கு பிரதமர் மோடி செல்கிறாரே? திருப்பரங்குன்றம் முருகராவது மோடிக்கு நல்ல புத்தியை கொடுக்கட்டும். திமுகவில் ஓபிஎஸ் இணைந்து அதிமுகவுக்கு நல்ல காலம் என்று அதிமுக முன்னாள் அமைச்சர்கள் கூறி இருக்கிறார்களே? வலுவிழந்தவர்களின் வார்த்தைகள் அப்படித்தான் இருக்கும். எனவே அவர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இவ்வாறு அமைச்சர் கூறினார்.

## சென்னையில் இருந்து துபாய், அபுதாபி, பஹ்ரைன் செல்லும் விமானங்கள் ரத்து செய்யப்படுவதாக அறிவிப்பு

சென்னை, மார்ச்.1-

சென்னையில் இருந்து துபாய், அபுதாபி, பஹ்ரைன் செல்லும் விமானங்கள் ரத்து செய்யப்படுவதாக அறிவித்துள்ளது. இஸ்ரேல் ஈரான் போர் காரணமாக மத்திய கிழக்கு நாடுகள் தங்கள் வான்வெளியை மூடியது. மத்திய கிழக்கு நாடுகள் தங்கள் வான்வெளியை மூடியதால், சென்னையில் இருந்து துபாய், அபுதாபி, பஹ்ரைன் செல்லும் விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது. ஈரானின் தாக்குதலை தொடர்ந்து கத்தார், குவைத், ஐக்கிய அரபு அமீரக நாடுகளின் வான்வெளி மூடல். மத்திய குழக்கு நாடுகள் வான்வெளியை மீண்டும் திறந்த பின், விமானங்கள் இயக்கப்படும் என நிறுவனங்கள் அறிவித்துள்ளது.




## "அழகிரி, கலையரசி..!" அங்கன்வாடி திறப்பு விழாவில் மழலையர்களுக்குப் பெயர் சூட்டி மகிழ்ந்த அமைச்சர் ஐ.பெரியசாமி

ஆத்தூர், மார்ச்.1-

ஆத்தூர் தொகுதியில் அக்கா, மதினி என சொல்லி அழைத்து வீடு வீடாக சென்று 'வெல்லும் தமிழ் பெண்கள்'' அண்ணன் ஸ்டாலின் முதலமைச்சராக மீண்டும் வரவேண்டும் எனக்கூறி உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்து வருகின்றனர். கரிசல்பட்டியில் வாக்குகள் சேகரித்த வெல்லும் தமிழ் பெண்களை அமைச்சர் ஐ.பெரியசாமி பாராட்டி வாழ்த்தினார்.



திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் திராவிட மாடல் ஆட்சி நாயகன் திமுக தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படியும், திமுக மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வழிகாட்டுதலின்படி கிளைக் கழக மற்றும் வார்டுகளைச் சேர்ந்த 'வெல்லும் தமிழ் பெண்கள்' தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் வீடு வீட்லீக சென்று நமக்கெல்லாம் காவல் தெய்வமாக இருக்கும் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முதல்வராக வேண்டும், ஆத்தூர் தொகுதியின் பாதுகாலர் ஐயா ஐ.பி.வரலாறு காணாத வெற்றியை பெற வேண்டுமென கூறி வாக்குகள் சேகரிப்பதோடு தமிழக அரசின் சாதனை திட்டங்களை பெண்கள் மத்தியில் எடுத்துரைத்து வருகின்றனர்.

கிராமங்களில் வாக்கு சேகரிக்க செல்லும் பெண்கள் அக்கா, மதினி வீட்டிலே இருக்கிறீங்களா என உறவு முறை சொல்லி அவர்கள் வீட்டின் உள்ளே சென்று அமர்ந்து வாக்குகள் சேகரிப்பது பொது மக்கள் மத்தியில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது. கரிசல்பட்டி ஊராட்சிக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க வந்த அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் வெல்லும் தமிழ் பெண்கள் வாக்குகள் சேகரிப்பதை பார்த்தவுடன், காரிலிருந்து இறங்கி அவர்களை பாராட்டி வாழ்த்திடனார். தமிழக முதல்வரின் சாதனை திட்டங்கள் மட்டுமின்றி துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் விளையாட்டு துறையின் மூலம் குக்கிராமத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு அரசு பணி வழங்கி வருவதையும் எடுத்துரைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

நிகழ்ச்சியின்போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர் இன்பராஜ், அகரம் பேரூராட்சி மன்றத்தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், கரிசல்பட்டி ஊராட்சி முன்னாள் தலைவர் பால்ராஜ், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஜஸ்டின் மிக்கேலம்மாள், சுப்புலெட்சுமி; வள்ளுவதாஸ், ஆசிரியர்கள் அமலஇளவரசு, ஜோசப் ஆசான், கிளைச் செயலாளர் ஜஸ்டீன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



■ திசையன்விளை பொதிகை பப்ளிக் ஸ்கூல் மழலையர் பள்ளி மாணவர்களுக்கு அரசு அலுவலகங்கள் நேரடி களப்பயணம். திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை பொதிகை பப்ளிக் ஸ்கூல் யுகேஜி (UKG) பயிலும் மழலையர் பள்ளி குழந்தைகளுக்கு, சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், தபால் நிலையம், காவல் நிலையம் மற்றும் தீயணைப்பு நிலையம் ஆகிய இடங்களுக்குச் சென்ற மழலையர்கள், அங்குள்ள செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்ததோடு, அரசு அதிகாரிகளுடன் ஆர்வத்துடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.



■ வரும் 2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் மீண்டும் போட்டியிட வேண்டி, தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் மு.அப்பாவு சென்னை அண்ணா அறிவாலயத்தில் முறைப்படி விருப்ப மனு வழங்கினார்.




## திணைக்கோட்பாடு தமிழருக்கே உரிய தனித்துவமான அடையாளம் பல்கலைக்கழகக் கருத்தரங்கில் பாமயன் உரை

சின்னாளபட்டி. மார்ச்,1-

காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சார்பில் ‘தமிழர் அறிவு மரபு’ என்ற தலைப்பில் இருநாள் தேசியக் கருத்தரங்கம் தொடங்கியது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் ந.பஞ்சநதம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், தமிழ்த்துறைத் தலைவர் பா.ஆனந்தகுமார் வரவேற்புரையாற்றினார். சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற வேளாண் விஞ்ஞானியும் எழுத்தாளருமான பாமயன், "திணைக்கோட்பாடு என்பது உலக நாகரிகங்களிலேயே தமிழருக்கே உரிய தனித்தன்மையான அறிவு மரபு" என்று சிறப்புரை யாற்றினார். விழாவில் 'அண்மைக்காலத் தமிழ் நாவல்கள் கோட்பாட்டு வாசிப்பு' என்ற நூல் வெளியிடப்பட்டதோடு, பல்வேறு அறிஞர்கள் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர். மதுரைக்கல்லூரி மேனாள் முதல்வர் இரா.முரளி, தமிழ் ஆய்வறிஞர் பொ.வேல்சாமி, பிஷப் ஹீப்பர் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் லி.சிவக்குமார் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள். தமிழ் மற்றும் இந்தித்துறைப் பேராசிரியர்கள், கௌரவ விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள், பல்வேறு கல்லூரி, பல்கலைக்கழகங்களிலிருந்து வந்திருந்த பேராசிரியர்கள், ஆய்வாளர் கள் ஆகியோர் பார்வையாளர்களாகப் பங்கேற்றனர். முன்னதாக தமிழ், இந்திய மொழிகள் மற்றும் கிராமியக் கலைகள் புலத்தின் முதன்மையர் பேராசிரியர் எஸ்.ஷாஜி வாழ்த்துரை வழங்கினார். நிறைவாக தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் சி.சிதம்பரம் நன்றி கூறினார்.

## கலைத் திருவிழாவால் களைகட்டிய கணேஷ் பொறியியல் கல்லூரி!” 15வது ஆண்டு ‘Razzmatz 2026’ கோலாகலம்






சேலம், மார்ச்.1-

சேலம் கணேஷ் பொறியியல் கல்லூரியின் 15 வது ஆண்டு விழாவான 'Razzmatz 2026' கல்லூரி வளாகத்தில் மிகப்பிரம்மாண்டமாக நடைபெற்றது. விழாவிற்குத் தாளாளர் தங்கவேல் தலைமை தாங்கி, மாணவர்களின் கல்வி மற்றும் ஒழுக்கத்தின் அவசியத்தை வலியுறுத்தித் தலைமையுரையாற்றினார். கல்லூரிச் செயலாளர் தா. விஜயகணேஷ், பொருளாளர் தா. செந்தில்குமார் மற்றும் முதல்வர் முனைவர் மூ. சுபாஷ் சந்திர போஸ் ஆகியோர் முன்னிலை வகித்து, கல்லூரியின் ஓராண்டு காலச் சாதனைகளை விளக்கி வாழ்த்துரை வழங்கினர்.

இவ்விழா மாணவர்களின் கலைத்திறனைப் பறைசாற்றும் ஒரு களமாக அமைந்தது. மேடையில் மழலையர் போலத் துள்ளி விளையாடிய பரதநாட்டியம், இளசுகளை உற்சாகப்படுத்திய குழு நடனங்கள் மற்றும் சமூகச் சிந்தனையைத் தூண்டும் வகையிலான குறுநாடகங்கள் எனப் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தின.

தொடர்ந்து, பல்கலைக்கழக அளவில் நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுப் பதக்கங்களையும், கோப்பைகளையும் வென்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்த மாணவ, மாணவிகளுக்குக் கல்லூரி நிர்வாகம் சார்பில் பரிசுகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. விழாவின் இறுதியில் செய்தியாளர்களைச் சந்தித்த கல்லூரி நிர்வாகத்தினர், மாணவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்துக் கலந்துரையாடினர்.

# தென்காசியில் 100% வாக்குப்பதிவு விழிப்புணர்வு: மகளிர் திட்ட இயக்குநர் தலைமையில் உறுதிமொழி





தென்காசி, மார்ச்.1-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் பிரம்மாண்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி தென்காசி இ.சி.ஈஸ்வரன் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. திட்ட இயக்குநர் எஸ்.அபிதா ஹனீப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் திரளாகப் பங்கேற்று, "என்வாக்கு விற்பனைக்கு அல்ல" மற்றும் "வாக்களிப்பதில் பெருமை கொள்வோம்" போன்ற முழக்கங்களை எழுப்பியதோடு, நேர்மையாக வாக்களிப்பதற்கான தேர்தல் உறுதிமொழியையும் ஏற்றுக்கொண்டனர். நிகழ்ச்சியில், மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள், வட்டார இயக்க மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள், வட்டார அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## அக்கா.. மதினி.. வீட்டில இருக்கீங்களா?” ஆத்தூரில் பாசமழை பொழிந்து வாக்குச் சேகரிக்கும் வெல்லும் தமிழ் பெண்கள்

திண்டுக்கல், மார்ச்.1-

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் திராவிட மாடல் ஆட்சி நாயகன் திமுக தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படியும், திமுக மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் வழிகாட்டுதலின்படி கிளைக் கழக மற்றும் வார்டுகளைச் சேர்ந்த ‘வெல்லும் தமிழ் பெண்கள்’ தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் வீடு வீட்லீக சென்று நமக்கெல்லாம் காவல் தெய்வமாக இருக்கும் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முதல்வராக வேண்டும், ஆத்தூர் தொகுதியின் பாதுகாலர் ஐயா ஐ.பி. அவர்கள் வரலாறு காணாத வெற்றியை பெற வேண்டுமென கூறி வாக்குகள் சேகரிப்பதோடு தமிழக அரசின் சாதனை திட்டங்களை பெண்கள் மத்தியில் எடுத்துரைத்து வருகின்றனர். கிராமங்களில் வாக்கு சேகரிக்க செல்லும் பெண்கள் அக்கா, மதினி வீட்டிலே இருக்கிறீங்களா என உறவு முறை சொல்லி அவர்கள் வீட்டின் உள்ளே சென்று அமர்ந்து வாக்குகள் சேகரிப்பது பொது மக்கள் மத்தியில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கரிசல்பட்டி ஊராட்சிக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க வந்த அமைச்சர் ஐ.பெரியசாமி வெல்லும் தமிழ் பெண்கள் வாக்குகள் சேகரிப்பதை பார்த்தவுடன், காரிலிருந்து இறங்கி அவர்களை பாராட்டி வாழ்த்தினார்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர் இன்பராஜ், அகரம் பேரூராட்சி மன்றத்தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், கரிசல்பட்டி ஊராட்சி முன்னாள் தலைவர் பால்ராஜ், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஜஸ்டின் மிக்கேலம்மாள், சுப்புலெட்சுமி; வள்ளுவதாஸ், ஆசிரியர்கள் அமலஇளவரசு, ஜோசப் ஆசான், கிளைச் செயலாளர் ஜஸ்டீன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



■ திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை சிறப்பு நிலை பேரூராட்சி முருகேசபுரம் மற்றும் செல்வமருதூரில் ரூபாய் 4 லட்சம் மதிப்பீட்டில் ஆழ்துளை கிணறு பணி துவங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு தலைமையேற்று அடிக்கல் நாட்டினார் பேரூராட்சி மன்ற தலைவி ஜான்சி ராணி. பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ஜெயக்குமார் முன்னிலை வகித்தார். மற்றும் கவுன்சிலர்கள் உதயா ராஜன், பிரேம்குமார், நல்ல கண்ணன், அலெக்ஸ் மற்றும் பிரதீப் ஸ்வீட்ஸ் உரிமையாளர் முருகானந்தம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





■ திருப்பூர் மாவட்டம் உடுமலை ஒன்றியம், பள்ளபாளையம் ஊராட்சி, ஆலம்பாளையம் பிரிவு பகுதியில் மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினரும், திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான, சி.மகேந்திரன் எம்ஏ. எம்எல்ஏ., தனது தொகுதி வளர்ச்சி நிதி ரூபாய். 12 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள பயணிகள் நிழற்குடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் உடுமலை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் போகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ மதுரை கிழக்கு வட்டம் காதக்கிணறு ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள காதக்கிணறு சார்பதிவாளர் அலுவலக கட்டிடத்தை அமைச்சர் பி.மூர்த்தி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து பார்வையிட்டார்.வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் ஷில்பா பிரபாகர்சதீஷ், தினேஷ்பொன்ராஜ் ஆலிவர், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை சுப்பிரமணியபுரத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை, மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் தலைமையில் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் நேரில் ஆய்வு செய்தார்.













SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000